பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 09 செவ்வாய்க்கிழமை (21-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 145

## பௌத்த குருமார் தூதுக்குழு நாளை யாழ் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஏப். 21

தென்னிலங்கையில் இருந்து வரும் பௌத்த குருமார் தூதுக்குழு நாளை புதன் கிழமை இங்கு வந்து சேரும் என அறியவந்துள்ளது.

நான்கு நாட்கள் இத்தூதுக் குழுவினர் இங்கு தங்கியிருப்பர். அப்போது விடுதலைப் புலிகள் தலைவர்களோடு முக்கிய பேச்சுக்களில் அவர்கள் ஈடுபடுவர்.

பௌத்த குருமார் தூதுக் குழுவுக்கு வண. பலப்பிட்டிய சித்தார்த்த மகாநாயக்க தேரர் தலைமை வகித்து வருவார். வண. மாதம்பகம அஸ்ஸாஜி தேரோ தூதுக்குழுவின் அமைப்பாளராக விளங்குவார்.

வண. மாவடவில பண்ண சேன தேரர், வண; பலப்பிட்டிய ரட்ணசிறி தேரர், வண.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முழுப் பாதுகாப்பு புலிகள் வழங்குவர்

யாழ்ப்பாணம், ஏப். 21

நாளை யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளும் பௌத்த குருமார் குழுவுக்கு இங்கு பூரண பாதுகாப்பை விடுதலைப் புலிகள் வழங்குவர் என தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுகளின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பல தடவை பின்போடப்பட்ட குருமாரின் விஜயம், கடைசியாக நாளை இடம் பெறும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது [உ-3]

# பருத்தித்துறை கடலில் நேற்று கடற்படையினர் அட்டகாசம்!

## 26 மீனவரைக் காணவில்லை ஒருவர் பலி; ஒருவர் தப்பினார்

— தாளையடி உதயன் செய்தியாளர் —

தாளையடி, ஏப்ரல் 21

பருத்தித்துறைக் கடற்பகுதியில் நேற்றுக் காலை கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், தொழில் உபகரணங்களை சேதப்படுத்தியும் பெரும் அட்டகாசம் புரிந்தனர்.

கடற்படையினரின் இந்த அட்டகாசத்துக்கு மத்தியில் 26 மீனவர்கள் காணாமற் போயினர்; படையினரின் சூட்டுக்கு ஒருவர் பலியானார்; மற்றொருவர் படையினரிடமிருந்து தப்பி நீந்திக் கரை சேர்ந்தார்.

நேற்று அதிகாலை பட்டுக்கலில் கடற்றொழிலுக்குச் சென்ற — பருத்தித்துறை முனையைச்சேர்ந்த — 26 மீனவர்களே நேற்று பிற்பகல் வரை கரை திரும்பவில்லை. அவர்களுக்கும் அவர்களது படகுகளுக்கும் என்ன நடந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மே தின விழாவில் போராட்ட உணர்வை பிரதிபலிக்கும் ஊர்திகள்

எதிர்வரும் மேதின விழாவுக்கு தயாரிக்கப்படும் ஊர்திகள் போராட்ட உணர்வையும், போராட்டத்தினூடாக விளையும் சமுதாய மாற்றத்தையும் வெளிப்படுத்துவனவாக இருக்கும்.

நேற்று நடைபெற்ற மேதின செயற்பாட்டுக் கூட்டுக்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பெண் அடக்குமுறை, சாதிக் கொடுமை, கலாசாரச் சீரழிவு, இராணுவக் கொடுமைகள் —

இவற்றுக்கு எதிராக போராளிகளும் மக்களும் முகம் கொடுத்து வெற்றி பெறுவதையும் — ஊர்திகள் சித்திரிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

மாணவர் எழுச்சி, தேசிய வளங்களைக் கொண்டு சுய சார்பு பொருளாதாரத்தை வளர்த்தல், உற்பத்தியை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படை அதிகாரிகளிடையே பெரும் கருத்து வேறுபாடு!

### பலர் பதவி விலகும் நிலையில்!!

கொழும்பு, ஏப். 21

ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் மத்தியில் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. இதனால் பொறுப்பான பதவிகளில் உள்ள அதிகாரிகள் பலர் பதவி விலகக் கூடும்.

— இவ்வாறு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியான கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

முப்படை செயற்பாடுகள் தொடர்பாக இம்மாத ஆரம்பத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து உயர்மட்ட அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்றும் —

மாற்றங்களை விரும்பாத அதிகாரிகள் பதவி விலகக் கூடுமெனவும் "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

திடமான — ஐக்கிய — சக்தி என இதுவரை நம்பப்பட்ட இராணுவத்தில் பிளவுகள் உள்ளன என்பது தற்போதைய மாற்றங்களின் பின்னர் வெளிப்பட்டிருக்கிறது என்று "த ஐலண்ட்" குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் செலவின விவகாரத்தில் அரசியல்வாதிகளும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நாட்டைவிட்டு நஜிபுல்லா வெளியேறுவதற்கு அனுமதி!

### இணக்கம் காணப்பட்டது

பதவி கவிழ்க்கப்பட்ட டாக்டர் நஜிபுல்லாவை ஆப்கனிஸ்தானில் இருந்து வெளியேற அனுமதிக்கும் உடன்பாடு ஒன்று, காபூல் விமான தளத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கூட்டுப்படைகளுக்கும் ஐ. நா. விசேட தூதருக்கும் இடையே ஏற்பட்டுள்ளதாக பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

இதன்படி டாக்டர் நஜிபுல்லா இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு நேற்று இரவு புறப்படவிருந்தார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

டாக்டர் நஜிபுல்லாவின் மனைவி, மற்றும் பிள்ளைகள், ஆப்கன் நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்னரே இந்தியாவுக்கு வந்து விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் டாக்டர் நஜிபுல்லா நாட்டை விட்டுத் தப்பிச் செல்லுமுகமாக காபூல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முப்படை உயர் தளபதிகள் கொழும்பில் முக்கிய கூட்டம்

### ராணுவத் தலைமையகத்தில் வெள்ளி நடைபெற்றது

கொழும்பு, ஏப். 21

இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் இராணுவம், விமானப் படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் தளபதிகள் தமது உயர்நிலை வெளிக்களத் தளபதிகளுடன் மாநாடு ஒன்றை நடத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் இம் மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இராணுவத்தின் பிராந்திய மற்றும் படையணித் தளபதிகள், வடக்கு — கிழக்கு யுத்தப் பிராந்தியத்தில் உள்ள படை மற்றும் விமானப் படைப் பிரதேசத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு— கிழக்கு போர் முனையில் உள்ள படையினரைச் சந்திப்பது, போர் உத்திகளை விளக்குவது, ஆயுதப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றைய விபத்துக்களில் ஒருவர் பலி; 7 பேர் படுகாயம்

யாழ். குடாநாட்டில் நேற்றுப் பரவலாக இடம்பெற்ற வீதி விபத்துக்களில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்; படுகாயமடைந்த 7 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அராலி வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அராலி கிழக்கைச் சேர்ந்த கந்தப்பு பரமசிவம் [வயது 60] என்பவர் தலையில் படுகாயமடைந்து, யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தியபோது மரணமானார்.

விபத்துகளில் படுகாயமடைந்த ஞானப்பிரகாசம் றொபின்சன் [வயது 20] — கிளிநொச்சி, எஸ். ரட்ணசாமி [வயது 43] — பண்டத்தரிப்பு, கந்தசாமி [வயது 48] — நல்லூர், எஸ். ராசமணி [வயது 52] — பண்ணாகம், ரி. ராசா [வயது 32] — யாழ்ப்பாணம் ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தில் காயமுற்ற மற்றும் இருவர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றனர். [உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் உணவு முத்திரை

# சில ப.நோ.கூ. சங்கங்களின் நடவடிக்கை குறித்து புகார்

அச்சுவேலி, ஏப் 21

பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைக்கு பொருள்களை விற்பனை செய்வதில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சில வித்தியாசமான நடைமுறைகளை கடைப்பிடிக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் மதிய உணவு முத்திரையின் பெறுமதிக்கு பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கான உபகரணங்கள் மற்றும் போஷாக்கு உணவு வகைகள் ஆகியவையே வழங்கப்பட வேண்டும்.

ஆனால் கடந்த டிசம்பர், ஜனவரி மாத மாணவர் மதிய உணவு முத்திரைக்கு வலி-கிழக்கில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவை ஒன்றில் கிலோ 26 ரூபா வீதம் நாட்டரிசியும், [குத்தரிசி] கிலோ 34 ரூபா வீதம் சீனியும், கிலோ 20 ரூபா வீதம் வெள்ளைப் பச்சை அரிசியும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இப்பொருள்களை விற்பனை செய்த போது தனியார் விற்பனை நிலையங்களில் நாட்டரிசி கிலோ 20 ரூபா வீதமும், சீனி கிலோ 28 ரூபா முதல் 30 ரூபா வீதமும் வெள்ளைப் பச்சை அரிசி கிலோ 16 ரூபா வீதமும் விற்பனை செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் மதிய உணவு முத்திரையின் உணவுப் பொருள்கள் விநியோகத்தில் காணப்படும் விலை வேறுபாடும் விநியோகிக்கும் பொருள்களின் தரவேறுபாடும் பெற்றோர்-மாணவர்களைச் சந்தேகம் கொள்ள வைக்கின்றன எனப் புகார் செய்யப்படுகின்றது.

[இ-11]

# இன்று

யாழ்ப்பாணம், ஏப் 21

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் இரண்டு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

மலோகரா அணியை எதிர்த்து டயமண்ட் அணி தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மோதும்.

கன்னாதிட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் றொஸ்கொப்பேர்ஸ் அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதும்.

★ ★ ★

யாழ்—திருமறைக் கலாமன்ற அரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு நாவற்குழியூர் சங்கீத கலாவித்தகர் திரு. சி. நாகராசாவின் இசைக் கச்சேரி இடம்பெறும். இந்நிகழ்ச்சியை நீதவின் கலைஞர்கள் பயிலகம் வழங்குகிறது.

# இரத்மலானை இந்து மே முதல் இயங்கும்

கொழும்பு, ஏப். 21

இரத்மலானை இந்துக் கல்லூரி அடுத்த மாதம் முதல் வாரத்தில் இருந்து மீண்டும் இயங்கும். ஜனாதிபதியின் விசேட பணிப்பைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு கல்லூரியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கல்லூரிக் கட்டடங்களை கடந்த வெள்ளிக்கிழமை காலை கல்வித் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தனர்.

கல்வித் திணைக்களத்தின் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் வெ. சபாநாயகம் கட்டடங்களைப் பொறுப்பேற்றார்.

இதனைத் தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் சாந்தி பூஜையும் நடத்தப்பட்டது. இந்தப் பூஜையில் பிரதி மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் வெ. சபாநாயகம், இந்து வித்தியா அபிவிருத்தி சங்கத் தலைவர் கே. வேலாயுதபிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். [த]

## குண்டு வெடிப்புகளுக்குப் பாவிக்க

# பழைய கார்கள் அதிக விலையில் புலிகளால் வாங்கப்பட்டதாம்

கொழும்பில் குண்டுகளை வைக்க விடுதலைப் புலிகள் கொழும்பிலிருந்து பழைய கார்களை மிக அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்றதாக விசேட பொலீஸ் பிரிவின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாம்.

புறக்கோட்டை, வத்தளை, கொட்டாஞ்சேனை பகுதிகளின் பொய் முகவரிகளைக் கொடுத்து இவை வாங்கப்பட்டனவாம்.

எனவே பழைய கார்களை வாங்க வருவோரின் ஆள் அடையாளங்களை பரிசீலிக்குமாறும், எச்சரிக்கையாய் இருக்குமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த)

## அம்பாறை, மஹரகம குண்டுவெடிப்பு

# சந்தேக நபருக்கு சிறிமாவோ வழங்கிய நியமனக் கடிதம் கைப்பற்றப்பட்டதாம்

கொழும்பு, ஏப். 21

அம்பாறை மற்றும் மஹரகம குண்டு வெடிப்புகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் கே. சபாரத்தினத்தை மட்டக்களப்பு மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களில் ஒருவராக நியமித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வழங்கிய கடிதம் ஒன்றினைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட சுதந்திரக் கட்சிப் பட்டியலில் தேர்தலில் நின்ற திரு சபாரத்தினத்திற்கு இந்த நியமனக்கடிதத்தை திருமதி பண்டாரநாயக்கா இவ்வருடம் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி கையளித்துள்ளார்.

அம்பாறைக் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பஸ்ஸை சந்தேக நபர் தனது உறவினர் ஒருவரின் பெயரில், களுதுவெல என்ற பொலீஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து வாங்கினார் என்று புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று பொலீஸாரால் வர்ணிக்கப்படும் ஒருவரே இந்த வாகனத்தை அம்பாறை மட்டக்களப்புப் பகுதிக்கு ஓட்டிச் சென்றாராம்.

இதேவேளை —

மஹரகம குண்டு வெடிப்புக்குப் பாவிக்கப்பட்ட 'ஹில்மன் மின்ட்' காரின் பதிவு இலக்கம் டன்விப்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து மாற்றப்பட்டதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

# மன்னார் திரும்பும் அகதிகள் மீது படையினர் நெருக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 21

தமிழ் நாட்டில் இருந்து மன்னாருக்குக் கப்பல் மூலம் வருவோரிடமும் அங்குள்ள படையினர் 'பற்றறி' போன்ற பொருள்களைப் பறிமுதல் செய்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இராமானுஜம் கப்பல் மூலம் மன்னாருக்கு வந்த வயோதிபப் பெண் ஒருவர் தனது வானொலிப் பெட்டிக்குப் பயன்படுத்தவென வைத்திருந்த பற்றறிகளை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ்காரர் ஒருவர் பறிமுதல் செய்ய முயன்றார் என்றும் —

அச்சமயம் அகதிகளுக்கும் பொறுப்பாக கடமையாற்றும் அரச அதிகாரி ஒருவர் தலையிட்டு அதனைத் தடுத்ததாகவும் தெரியவந்தது. (த-5)

# வெளிநாட்டவர் குடியேற்றம்: ஆஸி. அரசு கட்டுப்படுத்தும்

கன்பெரா ஏப். 21

ஆஸ்திரேலியாவில் வெளிநாட்டவர்கள் குடியேறுவதை அடுத்த நிதி ஆண்டில் குறைப்பதற்கு அந்த நாட்டின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது.

அடுத்த நிதி ஆண்டில் 80 ஆயிரம் வெளிநாட்டவர்களைத் தமது நாட்டில் குடியேற அனுமதிப்பது என்று ஆஸ்திரேலியா அரசு முன்னர் தீர்மானித்திருந்ததாகவும்-

இப்போது அந்த எண்ணிக்கையை 31 ஆயிரமாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் 'ஏஜ்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவரைக் குடியமர்த்தும் போது அப்படி குடியமர்த்தப்படுபவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பது என்றும் ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் குடியேற்றக் கொள்கையில் இது ஒரு பாரிய மாற்றம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டவர்களைக் குடியேற அனுமதிக்கும் புதிய கொள்கை, ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே தங்கியுள்ளவர்களின் நெருங்கிய உறவினர்கள், அக்குடும்பங்களுடன் இணைந்து கொள்வதை பாதிக்காது என்றும்-

சுதந்திரமாகச் சென்று குடியேறுபவர்களும் மறுபுறம் அவுஸ்திரேலியாவில் உள்ள குடும்பங்களின் தூரத்து உறவினர்கள் ஆகியோரையே புதிய குடியேற்றக் கொள்கை பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் அரசின் புதிய குடியேற்றக் கொள்கை காரணமாக 1992-93 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்படும் வெளிநாட்டு அகதிகளின் எண்ணிக்கை குறையுமா என்பது தெளிவாக இல்லை என்றும்-

1991-92 ஆம் ஆண்டில் 12 ஆயிரம் வெளிநாட்டு அகதிகளுக்கு ஆஸ்திரேலியாவில் இடமளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-எ)

# உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 21

ஏழாலை பெரியதம்பிரான் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை புதன்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும். தீ மிதிப்பு நிகழ்ச்சி மறுநாள் வியாழக்கிழமை இடம்பெறும்.

[த]

# நெடுங்கேணியில் பூபதியின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

நெடுங்கேணி, ஏப். 21

அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு கூருமுகமாக நெடுங்கேணி பிரதேசத்தில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வாரங்களாக இப்பகுதிகளில் சுழற்சி முறையில் உண்ணாவிரதங்கள் இடம்பெற்றன. நெடுங்கேணிப் பிரதேசத்தின் பிரதான வீதிகள் தோறும் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்யப்பட்டது. வர்த்தக நிலையங்கள், அரச கட்டடங்கள் ஆகியவையும் மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அன்னையின் திருவுருவப் படங்களுக்கு குத்து விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

ஒலுமடு, மருதோடை, நயினாமடு, தண்டுவான், குளவிசுட்டான் ஆகிய கிராமங்களிலும் அன்னையை நினைவு கூரும் நிகழ்ச்சிகள் விரிவான முறையில் இடம்பெற்றதாக நெடுங்கேணிப் பிரதேச விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கதிரவன் தெரிவித்தார்.

[த-108]


# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

O/L DAY CLASS

23-04-1992 [வியாழன்]

ஆரம்பமாகின்றது

8 – 1 மணி வரை

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்லவடிவேல் |
| கணிதம் | — ரவி |
| தமிழ், சமயம் | — பண்டிதர் |
| சமூகக்கல்வி | — பிரபல ஆசிரியர் |
| ஆங்கிலம் | — தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — ராஜா |

— நிர்வாகி.

[இ-1877]



# சிறுவர் பாடசாலை கல்வியியல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்

மேற்படி வைபவம் ஞாயிற்றுக்கிழமை 03-05-1992 யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெற உள்ளது. இப்பயிற்சி நெறியில் சித்தி எய்திய சிறுவர் பாடசாலை ஆசிரியர்களின் விவரம் 03-03-1992 ஈழநாதம் பத்திரிகையில் வெளியாகிய பட்டியலின் படி சான்றிதழ்கள் வழங்கப்படும். கிளிநொச்சி, முல்லைத்தீவு (புதுக்குடியிருப்பு), யாழ். மாவட்டங்களில் (சங்கானை, கரவெட்டி, யாழ்ப்பாணம்) சித்தி எய்தியவர்கள் அந்தந்த தலைமை நிலையங்களுடன் 27-04-1992 பிற்பகல் 2-00 மணிக்கு முன்னர் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு கொள்ளத் தவறியோர் வைபவத்திற்கு வராதோராகக் கருதப்படுவர்.

இந்நிலையத்தில் ஏற்கனவே

1. டிப்ளோமா சான்றிதழ்கள் பெற்றவர்கள்
2. பரீட்சை எடுத்து தகுதியடையாதோர்
3. பயிற்சி முடிந்தும் பரீட்சை எடுக்காதோர்
4. பயிற்சி எடுப்பவர்கள்
5. பயிற்சி எடுக்க விரும்புவோர். இவ் வைபவத்தில் கலந்து கொள்ளலாம்.

இவர்கள் இம்மாதம் 27 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு முன் தலைமை நிலையங்களில் தொடர்பு கொண்டு, பெயர்களை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். தொடர்பு கொள்ளத் தவறியோர் வராதோராகக் கருதப்படுவர்.

தா. இராஜேஸ்வரன்,
பணிப்பாளர்.

சிறுவர் பாடசாலை-
ஆசிரியர் பயிற்சி நிலையம்,
மூளாய்.

[20654]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். வருவதற்கான முயற்சிகளை தொண்டா மீண்டும் ஆரம்பிப்பார்

## அவரே கூறுகிறார்

கொழும்பு, ஏப். 21
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது தீர்மானத்தை மேற்கொண்ட பின்னர், தனது யாழ் விஜயம் குறித்து மீண்டும் நடவடிக்கைகளைத் தொடரப் போவதாக அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு திரு. தொண்டமான் தமது கட்சியின் [இ. தொ. காவின்] யோசனையை சமர்ப்பித்திருப்பதும் —

தெரிவுக்குழு தனது தீர்மானத்தைத் தயாரிக்கும் வரை யாழ். பயணத்தை அவர் ஒத்திவைத்திருப்பதும் தெரிந்தவையே.

தெரிவுக்குழு அடுத்த மாத ஆரம்பத்தில் கூடும்போது தனது தீர்மானத்தை தயாரித்து இறுதியாக்கும் என்றும் —

அதன் பின்னர் திரு. தொண்டமான் யாழ். வருவதற்கான தனது முயற்சிகளைத் தொடருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

# ஹோட்டலில் சாப்பிட்ட ஈழத் தமிழர் பணத்தைக் கேட்டபோது துப்பாக்கியை நீட்டினாராம்

சென்னை, ஏப். 21
தமிழ்நாடு பட்டுக்கோட்டையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திய இரண்டு ஈழத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்பவதினம் ஹோட்டலுக்குள் நுழைந்த வாலிபர் ஒருவர் நன்றாகச் சாப்பிட்டு விட்டு ஹோட்டலைவிட்டு வெளியேற முயன்றாராம். ஹோட்டல் சிப்பந்தி அவரது உணவுக்குரிய 'பில்' கொடுத்தாராம். உடனே அந்த வாலிபர் தனது பாக்கெட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் காட்டி சிப்பந்தியை மிரட்டிவிட்டு, தப்பியோடிவிட்டார்.

இது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, வடசேரி வீதியில் ரொட்டிக் கடை ஒன்றில் பதுங்கியிருந்த இரு ஈழத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேந்திரராஜா [வயது 38], அன்பு [வயது 28] ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர் [உ-3]

# செஞ்சிலுவை அதிகாரிகள் மீண்டும் பலாலி செல்வர்

யாழ்ப்பாணம், ஏப். 21
பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் இவ்வார நடுப்பகுதியில் மீண்டும் அங்கு செல்ல விருக்கின்றனர்.

தமிழ் தெரிந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசககுழு அதிகாரி ஒருவர் கொழும்பில் இருந்து வரலாம் என்றும் —

அந்த அதிகாரி வந்து சேர்ந்ததும் பலாலிக்கு குழு செல்லும் என்றும் —

உறவினர்களின் கடிதங்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான உதவிப் பொருள்கள் ஆகியவற்றை குழு எடுத்துச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# சிங்களச் சிப்பாய் பார்த்திருக்க பிள்ளையார் ஆலயத்துக்குள் இறங்கிய ஒளிப்பிழம்பு!

## வீரமுனையில் அதிசயம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமமான வீரமுனையில் கடந்த வெள்ளியன்று ஓர் அதிசயம் நிகழ்ந்ததாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வீரமுனையில் கடமையில் இருந்த சிங்களச் சிப்பாய் ஒருவர் பார்த்திருக்க, பாரிய ஓர் ஒளிப்பிழம்பு வானிலிருந்து கீழிறங்கி, வீரமுனை பிள்ளையார் ஆலயத்தில் விழுந்து, உட் சென்றதாம்!

உடனே அந்தச் சிப்பாய் முகாம் பொறுப்பதிகாரிக்கு அதை அறிவிக்க, அங்கு சகலரும் கூடி மலர்கள், பூமாலை சகிதம் சென்று விநாயகரை வணங்கினராம்.

அப்பிழம்பு வந்து வீழ்ந்ததை தாங்களும் கண்டதாக பல கிராம வாசிகளும் கூறியுள்ளனர்.

கடந்த ஓராண்டு காலமாக அஞ்ஞாதவாசம் புரிந்த விநாயகர் மீண்டும் தமது இல்லத்துக்குத் திரும்பி விட்டார் என்று கிராம வாசிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

1991 வன்செயல்களை அடுத்து அகதிகளாக இடம் பெயர்ந்த வீரமுனைத் தமிழர்கள் கடந்த மாதத்திலேயே மீளக்குடியமர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [உ - 3]

# கொழும்பில் இருந்து தாண்டிக்குளம் வரை ரயில்

## பாதை செப்பனிடப்படுகிறது

கொழும்பு, ஏப். 21
வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரையிலான இரண்டு மைல் நீள ரயில் பாதை உடனடியாகச் செப்பனிடப்படும்.

இது சம்பந்தமான வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது.

இதற்காக அநுராதபுரத்திலிருந்து ரயில்வே திணைக்கள ஊழியர்கள் கடந்த ஞாயிறன்று வவுனியா வந்து சேர்ந்தனர்.

பாதை அமைக்கப்பட்ட பின்னர் கொழும்பு ரயில், தாண்டிக்குளம் வரை செல்லும் என்றும்— யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பயணிகள் தாண்டிக்குளத்திலிருந்துநேரடியாக ரயிலில் கொழும்பு செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# தொப்பிகலையில் கைதானோரில் 14 இளைஞர் பற்றி தகவல் இல்லை

## மன்னிப்புச் சபையின் அறிக்கையில் பிரஸ்தாபம்

கொழும்பு, ஏப் 21
கடந்த ஜனவரி 20 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தொப்பிகல கிரான் பகுதியில் இடம்பெற்ற "ஒபரேஷன் கிறீன் பெல்ட்" நடவடிக்கையின் போது படையினரால் கைது செய்யப்பட்ட 25 பேரில் 11 பேர் விடுவிக்கப்பட்டனர். எஞ்சிய 14 இளைஞர்களின் கதி என்னவென்று தெரியவில்லை.

சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மாதம் வெளியிட்ட தனது அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

நெல் அறுவடையில் ஈடுபட்ட விவசாயிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். வாழைச்சேனை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக நம்பப்படும் இவர்கள், பின்னர் காணாமற் போய் விட்டனர். இவர்கள் கதி பற்றியோ, இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது பற்றியோ தகவல் ஏதும் இல்லை.

துரைசாமி ராஜலிங்கம், சின்னத்தம்பி விநாயகமூர்த்தி, காசுபதி விஜயகுமார், கணபதிப்பிள்ளை சந்திரகுமார், நாகலிங்கம் சுதர்சன், சாந்தலிங்கம் கோமேஸ்வரன், மயில்வாகனம் செல்வராஜா, மாணிக்கம் சிவேந்திரன், அருமைநாதன் தவராஜா, முருகபதி பத்மநாதன், வைரமுத்து தயா, முருகேசபிள்ளை ரத்னம், பெரியதம்பி நடராஜா, சின்னத்தம்பி சிவானந்தராஜா ஆகியோரே காணாமற் போயுள்ளனர்.

— இவ்வாறு மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கிறது. [உ-3]

# நெடுங்கேணிப் பகுதியில் விவசாயம் பெரும் பாதிப்பு

நெடுங்கேணி, ஏப். 21
நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நெற்செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு நெற்செய்கைக்கும், உழுந்து, பயறு, கௌபி பயிரிடுவதற்கு பொது நிறுவனங்கள் கடன் உதவி வழங்கி இருந்தன தற்போது பெருமளவில் வரட்சி நிலவுவதால் போதியளவு நெற்செய்கையும் உப உணவுப் பயிர்களும் பாதிப்படைந்துள்ளன என்றும் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-108)

# சாவகச்சேரியில் கடைகளில் திருட்டு

சங்கத்தானை, ஏப். 21
சாவகச்சேரி கண்டி வீதியில் உள்ள இரண்டு கடைகளில் முன்பக்கக் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. புத்தாண்டு தினத்தில் இச்சம்பவம் நடந்தது.

யூனியன் பேக்கரிக்கு அருகேயுள்ள கடை ஒன்றில் பதினையாயிரம் ரூபா பெறுமதியான பால்மா, சிகரட் போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பெற்றோல் நிலையத்திற்கு அருகில் உள்ள விற்பனை நிலையத்தில் இரண்டாவது தடவையாக [illegible] யான பொருள்கள் களவாடப் பட்டுள்ளன. [இ-ரி]

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



### தேவரத்தினம் சசினா

கரணவாய் மேற்கு, சோளங்கனைச் சேர்ந்த தேவரத்தினம் ஜெயவதனா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி சசினா தனது முதலாவது பிறந்த நாளை இன்று [21 - 04 - 1992] சுவிஸில் அப்பா அம்மாவுடன் கொண்டாடுகின்றார்.

இவரை பல்கலைகளும் பெற்று, சிறப்புடன் வாழ்கவென கரவெட்டி சோளங்கனைச் சேர்ந்த அப்பப்பா, அம்மம்மா, அப்பாச்சி, பேரன், பேர்த்தி, அன்புப் பூட்டன்மார், மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியப்பாமார் ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

[சி-1935]

## இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி
# இறுதிப் பரீட்சை 1989, 1990, 1991

கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடநெறிகளுக்கான பரீட்சை எதிரில் குறிப்பிட்டிருக்கும் திகதிகளில் ஆரம்பமாகும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| பயிற்சி நெறி | பரீட்சை ஆரம்பமாகும் திகதி |
|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல்/ வர்த்தகவியல் டிப்ளோமா- 3ஆம் ஆண்டு | — 1992-05-04 |
| 2. தேசிய தொழில்நுட்பச்- சான்றிதழ் [N. C. T.] Electrical Civil Mechanical, Q S. | — 1992-05-11 |
| 3. உயர் தேசிய கணக்கியல்/வர்த்தகவியல் டிப்ளோமா 4ஆம் ஆண்டு | — 1992-05-18 |
| 4. படம் வரைதல் தொழில் பயில்வோர் சான்றிதழ் | — 1992-06-16 |
| 5. N. C. A. T. சான்றிதழ்/உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2ஆம் வருடம் (புதிய - பாடத்திட்டம்] | — 1992-06-08 |
| 6. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 3ஆம் ஆண்டு [புதிய பாடத்திட்டம்] | — 1992-06-22 |

பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு முதல் அலுவலக நாளில் உரிய பகுதித் தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைக் காட்டி, தமது பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-2208]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனையாகின்றன

கடந்த கால O/L, A/L வினா - விடைகள் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு. அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/2203]

## தேவை

தேநீர்சாலையில் உணவு பரிமாறும் வேலைக்கு ஆண்கள் உடன் தேவை. அனுபவம் உடையவர்கள் நேரில் சமுகம் தரவும். பம்பாய் உணவு இன்சுவையகம், 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4675]

## புலமைப் பரிசில் பரீட்சை

19-04-92 ஞாயிறு நடைபெறவிருந்த ஆண்டு 5 [1992] மாதிரிப் பரீட்சை 21-04-92 செவ்வாய் மு. ப. 8-00 — மு. ப. 11-00க்கும், ஆண்டு 5 [1991], 23-04-92 வியாழன் மு.ப. 7-00 மு.ப. 11-00க்கும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20643]

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/1888]

## சுகவாழ்வின் இரகசியம்

உங்களின் சுகாதாரப் பிரச்சினை எதுவாக இருந்தாலும் முழுமையான திட்டத்தின் மூலமாகத் தீர்வு காண முடியும். எல்லாம் இலவசம். முகவரி: கதிர்காமத்தம்பி ஜெகநாதன், பொது சுகாதார விரிவுரையாளர். 66, சீனியர், ஒழுங்கை யாழ்ப்பாணம். [4684]

## இலவச திருமண சேவை

34 வயது, புனர்பூசம் 4, செவ்வாய்12, Ph.D., U.S.A. பெண் விரிவுரையாளருக்கு ஏற்ற மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும், நேரடிச் சந்திப்பு ஞாயிறு காலையில், து. விமலா, யா/நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4677]

## தாபரிப்புப் பணம்

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இராணுவவன்செயல்களினால் தந்தையை இழந்த வறிய சிறுவர்களுக்கு என புதிதாகத் தாபரிப்புப்பணம் வழங்கும் நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்கள் சமாசம் மேற்கொண்டு வருகின்றது. [த-30]

## குடும்ப அட்டை பதிவு

வரணி, ஏப். 21

மாசேரி, வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் குடும்ப அட்டைகள் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது [த-170]

## உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 21

காரைநகர் மாணவர்களுக்கான அக்டோபர் மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகள் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

---

★ O/L ★

க. பொ. த. சாதாரணதரம்

## பகல் முழுநேர வகுப்பு

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி-1891]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

பிரிவு — 3 DAY CLASSES (8 00—3-00)

பிரிவு — 4 EVENING CLASSES (3-00 — 6-00)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 23 - 04 - 1992

★ 92 ஆம் ஆண்டு O/L மாணவர்களுக்கான அனுமதிகள் 19-04-92 தொடக்கம் 07-05-92 மட்டுமே வழங்கப்படும். அதன் பின் வழங்கப்படமாட்டாது.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-2201]

---

# கவின் கலைகள் பயிலகம்

## SCHOOL OF FINE ARTS

### புதிய மாணவர்களைச் சேர்த்தல்

வாய்ப்பாட்டு, நடனம், வீணை, வயலின், மிருதங்கம், கிற்றார், ஓர்கன், நாதஸ்வரம் ஆகிய பாடங்களைப் பயில விரும்புவோர் 30-04-1992 க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்

[சி/1932]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி இ. கனகராணி

[எழுதுவினைஞர், உதவி அரசாங்க அதிபர்-பணிமனை, நெல்லியடி]

மண்ணகம்: 13 09—1950

விண்ணகம்: 25—04—1989

திதி: 21—04—1992

உன் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, மருமக்கள்.

நெல்லியடி. [4672]

---

# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 94 கலை, வர்த்தக

வகுப்புகள் ஆரம்பம்: 25 - 04 - 92 (சனி) 3 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — உதயன் |
| கணக்கியல் | — ஸ்ரீ |
| வர்த்தகமும்நிதியும் | — தேவா |
| அளவையியல் | — எஸ். எஸ். மனோகரன் |
| புவியியல் | — வேலா |
| தமிழ் | — குழந்தை |
| இந்துநாகரிகம் | — சோதி |
| அரசியல் | — நவம் |
| வரலாறு | — பிள்ளை |

- நிர்வாகி.

[சி/1898]

---

# துரித மீட்டல் வகுப்பு O/L

## கலை, வர்த்தக கல்லூரி C.C.A

வெலிங்டன் சந்திக்கு அருகாமை யாழ்ப்பாணம்.

## DAY CLASS O/L - 1992

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — திரு. இரா அருள்செல்வம் |
| சமூகக்கல்வி | — திரு. கணேஸ் |
| தமிழ் | — பண்டிதர் |
| சமயம் | — திருமதி குமரன் |
| ஆங்கிலம் | — திரு. T. லிங்கம் |
| வர்த்தகம் | — திரு. விக்கி |

ஆரம்பம்: 23 - 04 - 1992 காலை 8-00 மணி

குறிப்பு: மாணவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப பாடங்களை தெரிவு செய்யலாம். வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.

[சி-2205]

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 17 — 06 — 1966

விண்ணில்: 21 — 04 — 1985



### இராஜதுரை உதயணன்

நீ மறைந்து முடிந்த ஏழாண்டை நினைக்கும் போது எம் உள்ளம் எல்லாம் குமுறுதைய்யா! -
என் செய்வோம்
அடிமைத் தனத்தின் விலங்கினை உடைத்தெறிய அசைக்க முடியாத உறுதியுடைய செல்வமே! -
உதயணன்

எம் கண்ணீரை மாலையாக்கி, உன் பாத மலருக்கு எம் காணிக்கையாக்குகின்றோம் -
உதயணா உனக்கு
உம் ஆத்ம சாந்திக்காய் நாம் அனைவரும் - என்றும் எம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

- குடும்பத்தினர்.

திரு. பொ. இராஜதுரை,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

(20631)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனை

### பிரித்துக் காட்டுகிறார்!

எதிர்வரும் மே மாதத்தில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவதற்கு எதிரணித் தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அவசரகாலச் சட்ட விதிகளை நீக்குதல், மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் அரச நிறுவனங்களை தனியார் முதலாளிகளிடம் ஒப்படைப்பதை நிறுத்துதல், கூட்டுத்தாபன தனியார் துறை ஊழியருக்கு சம்பள உயர்வு வழங்குதல் ஆகியனவே பொது வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கைகளாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அரசாங்கம் மிகவும் நொந்து போயுள்ள காலம் இது.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், அதன் விளைவாக இங்கு அரசாங்கம் தனது ஆணையை இழந்து போயுள்ள பரிதாபம். போரினால் சிங்கள இளைஞர்கள் இறந்து போவது ஒருபுறமிருக்க இராணுவச் செலவுகளின் அதிகரிப்பால் பொருளாதார நெருக்கடி பூதாகரமாகி விட்டமை. இவைக்கு மேலதிகமாக வரட்சியும் வந்து தென்னிலங்கையை வாட்டுகிறது;

இவற்றின் விளைவுகளை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர் பாதிப்புகளை அனுபவிக்கத் தொடங்கி உள்ளனர். அதனால் தெற்கில் அரசுக்கு எதிரான மக்கள் அலை பெருகி வருகிறது என்பது உண்மை.

அவசர காலச் சட்டம் அமுலில் உள்ள போது வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களை அவர்களின் பதவிகளில் இருந்து நீக்கிவிடுவது அரசாங்கத்துக்கு மிகவும் சுலபமாக இருக்கும். எனினும் அந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது தென்னிலங்கையில் உள்ள அரச ஊழியர்களும் ஏனைய தனியார் ஊழியர் மற்றும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்ய முனைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் இவர்கள் தங்கள் கோரிக்கைகளில் தமிழ்ப் பிரதேசத் தொழிலாளர்கள், உழைப்பாளிகள் தங்கள் தொழில்களை இழந்து தவிக்கும் விவகாரத்தையேனும் ஒன்றாகச் சேர்க்கவில்லை.

தென்பகுதித் தொழிலாளர்களும், உழைக்கும் வர்க்கமும் வேறு; தமிழ்ப் பகுதி தொழிலாளர்களும், உழைக்கும் வர்க்கமும் வேறு என்று அங்குள்ள தொழிற்சங்கவாதிகளும், அவர்கள் சார்ந்துள்ள அரசியல் அணிகளும் பால் வெள்ளையாகப் பிரித்துக் காட்டிவிட்டனர்!

நீண்ட காலத்திற்குப் பின்னர் பொது வேலை நிறுத்தம் ஒன்றை ஒழுங்கு செய்யும் தொழிற்சங்கவாதிகள் தமிழ்ப் பிரதேசத்தையும், இப்பகுதி உழைக்கும் வர்க்கத்தையும் அவர்களின் துன்ப துயரங்களையும் மறந்து விட்டார்கள்.

தமிழர்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே செய்ய வேண்டும். தமக்குள்ள குறைகளைத் தாமே நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் — என்பதை தென்னிலங்கைத் தொழிற்சங்கங்களும் உறுதி செய்கின்றன. அந்த வகையில் அவர்களுக்கு நன்றி!

அத் தொழிற் சங்கங்களின் இங்குள்ள அங்கத்தவர்களுக்கு, அபிமானிகளுக்கு, இது நல்லதோர் படிப்பினை! தொழிற்சங்கமோ வேறு எதுவோ சொந்த மண்ணிலேயே அது வேர் கொண்டிருக்க வேண்டும் என்பதை இனியாவது மறவாது அவர்கள் செயற்படுவார்களாக!

# புலிகளின் மனோதிடம் உச்சநிலையில்; பெண்களின் போர்த்திறனோ உக்கிரம்

## இராணுவ வட்டாரங்களில் இப்படி அபிப்பிராயம்

'மாற்றங்களுக்கு மத்தியிலும் இராணுவம் அணிவகுத்துச் செல்கிறது'' என்ற தலைப்பில் 19-4-1992 'சண்டே ஐலண்ட்' இதழில் ரொஹான் குணசேகரா அரசியல் விமர்சனம் ஒன்றை எழுதி இருந்தார். அதில் இருந்து சில பகுதிகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தனது பதவிக் காலத்தின் தற்போதைய கட்டத்திலும் —

இனமோதலின் தற்போதைய நிலையிலும் —

பாதுகாப்புப் படையினரின் எந்தப் பிரிவையும் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் பகைத்துக் கொள்ள முடியாது.

அளவால் மட்டுமன்றி, படையினர் சிந்தும் இரத்தம், வியர்வையினாலுமே நாடு துண்டாடப்படுவதை இன்று தவிர்த்துக் கொள்ள முடிகிறது.

இதனால் இராணுவம் உள்நாட்டு அதிகாரக் கட்டமைப்பில் முக்கியமான, பெரும்பாலும் தீர்க்கமான, பங்காளராக முன்னுக்கு வந்து கொண்டிருக்கின்றது.

இராணுவத் தலைமைப் பீடத்தில் அண்மையில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தணிக்க உருவாக்கப்பட்ட இணக்கத் தீர்வு அதனை விளக்குவதாக உள்ளது.

முப்படைகளும் தமக்கென ஒரு கூட்டுத்தலைமை அலுவலகத்தை அமைக்கும் திட்டம் ஒன்றை அரசு நிராகரித்து விட்டது.

கூட்டுச் செயற்பாடு கட்டளைப்பீடம் மற்றும் ஒவ்வொரு படைக்கும் தலைமையகம் இருக்கும்போது புதிய அமைப்புக்கு இடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டுச் செயற்பாடுகள் கட்டளைப்பீட (JOC) அலுவலகத்தின் உள்ளேயே கூட்டுப் பாதுகாப்புப் படைகள் தலைமையகத்தையும் வைத்திருப்பது என்று தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற ஒரு கூட்டுப் பாதுகாப்புப் படையினரின் தலைமை அலுவலகமே அனுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நடமாடும் தலைமை அலுவலகமாக இருக்கும். ஒருங்கிணைப்பு, மேற்பார்வை ஆகியவற்றுடன் பிரதான இராணுவ நடவடிக்கைகளின் போது எழும் விளைவுகள் ஆகியவற்றை முப்படைகளின் தளபதிகளும் நேரில் சென்று அவதானிக்கவும் இந்த நடமாடும் தலைமை அலுவலகம் உதவும்.

இது வெளிக்களத் தளபதிகளிடமிருந்து வரும் சமிஞை போக்குவரத்துக்களைக் குறைக்கவும், பதில் நடவடிக்கை மேற்கொள்ள எடுக்கும் நேரத்தைக் குறைக்கவும் பயன்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சமகால இராணுவ நடவடிக்கை

...... கிழக்கில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் திட்டத்திற்கு இராணுவம் முன்னுரிமை கொடுத்திருப்பினும், வடபகுதியிலும் சமகால இராணுவ நடவடிக்கைகளை நிராகரித்து விட முடியாது. விடுதலைப் புலிகளை ஊகம் செய்யும் நிலையில் (Guessing) வைத்துக் கொள்ளுவதற்காக சமகால இராணுவ நடவடிக்கை வடபகுதியில் இடம்பெறலாம்.

மீண்டும் சண்டை ஆரம்பித்த பின்னர் கடந்த 2 ஆண்டுகளாக குடாநாட்டை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தை இராணுவத்தால் பிடிக்க முடியாது என்று கூறும் விமர்சகர்களுக்குப் பதிலாக பின்வருமாறு கூறப்படுகிறது:-

''வடபகுதியில் பெரிய தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் பலவீனமடையச் செய்யப்பட்டுள்ளார்கள். யாழ். மேற்கில் உள்ள தீவுகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இன்னொரு பிரதானமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள்'' என்பதே அப்பதில்.

யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பு பாதுகாப்புப் படையினரின் முழுப்பலத்தையும் காட்டுவதாக இருக்கும். அதன் வெற்றிக்கு என்றுமில்லாத அளவு ஒருங்கிணைப்புத் தேவை. இரண்டு படையணிகள் யாழ் மேற்கே உள்ள தீவுகளில் உள்ளன. பூநகரி படையணி 10 பிரிவுகளின் கீழ் உள்ளது. தீவுப் பகுதிகளின் கரையோரங்கள் பங்கர்களாக அரண் செய்யப்பட்டுள்ளன.

### புலிகளின் மனோதிடம்

அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு சில தோல்விகள் ஏற்பட்டிருப்பினும் அவர்களின் மனோதிடம் குறிப்பிடத்தக்க அளவு உச்சஸ்தானத்தில் உள்ளதாக இராணுவப் போர் அதிகாரிகள் கூறியுள்ளனர். களத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் — விசேடமாக பெண் புலிப் போராளிகள் இலட்சிய வேட்கையுடன் உக்கிரமாக போரிடுகின்றனர் அதனால் அவர்கள் எதிரிகளின் மதிப்பையும் பெற்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளை எதிர்த்துத் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் கடினமானது. எப்படியாவது நுழைந்து படையினரைத் தாக்கும் திறமை விடுதலைப் புலிகளுக்கு உண்டு.

புதிதாகத் திட்டப்பட்ட இராணுவ பயிற்சி அதிகாரிகளுக்கு நடத்தப்படும் வகுப்புகளில் —

'விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலட்சிய வேட்கை மற்றும் மனோதிடம் கொண்டு படையினர் போரிட வேண்டும்' என்று போர் நிபுணத்துவ அதிகாரிகள் போதிக்கின்றனர்.

### மாற்றத்துக்கு எதிர்ப்பு

இராணுவக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இராணுவத்தின் சில பிரிவுகளில் கசப்பையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன. பெரும் எண்ணிக்கையில் அதிகாரிகள் பதவி விலகுவர் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன. மாற்றங்களினால் துருப்புகளின் மனோதிடம் பாதிக்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது.

மாற்றங்கள் இராணுவத்தில் பிளவை ஏற்படுத்தியுள்ளன மாற்றம் ஏற்படும் வரை ஒரு தனி அமைப்பாகவே இராணுவம் இருந்து வந்தது.

பிரபலமான இராணுவ அதிகாரிகள் மாற்றம் காரணமாக பாதிக்கப்படின் வெறுப்புணர்வு அதிகரிக்க முடியும்.

இராணுவத்தில் பிளவு, வெறுப்பு உணர்வு என்பன எல்லாம் சுத்த பேத்தல்கள் என்று இன்னும் சிலர் நிராகரிக்கின்றனர்.

தனிப்பட்டவர்களின் தலைவிதியைப் பார்க்காது ஒழுங்கான இராணுவம் தொடர்ந்து போரிடும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். [இ-எ]

# நாம் எதிர்கொண்ட சவால்களை தியாகத்தினால் வென்றவர் பூபதி

## அஞ்சலிக் கூட்டத்தில் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம், ஏப் 21

நெருக்கடியான ஓர் கால கட்டத்தில் எமது இயக்கம் எதிர் கொண்ட அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான சவால்களை தனது உறுதியான தியாகத்தின் மூலம் வென்றவர் அன்னை பூபதி.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பகத்தினர் ஏற்பாடு செய்திருந்த அன்னை பூபதி நினைவு தின அஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. இளம்பரிதி முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவின் நெருக்குதல்கள், அழுத்தங்கள் இன்றும் எம்மைத் தொடர்கின்றன. இங்கே புரட்சிகர தலைமை ஒன்று இருப்பதை — சமதர்ம தேசம் ஒன்று உருவாகுவதை — அரசியல், சமூக, பொருளாதார விடுதலைப் புணர்ச்சி பெற்ற தார்மீக சமுதாயம் ஒன்று மேலோங்குவதை இந்திய முதலாளித்துவம் விரும்பவில்லை.

இந்திய மத்திய அ[illegible] தமிழ் நாடு மாநில அரசினதும் பகைமுகமான, நேரடியான துரோக நடவடிக்கைகள் தொடர்ந்தாலும் இங்கு நடக்கும் உறுதியான போராட்டம் விரைவில் இந்தியாவின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்திய மக்களின் உணர்வுகள் எங்கள் பக்கமே நிற்கின்றன.

மாபெரும் சர்வதேச நெருக்கடிகளை— சவால்களை' என்றும் நாம் எதிர்கொண்டு வெற்றி பெற இத்தகைய தியாகப் பாடங்கள் எமது சந்ததிக்கு உதவும் என்று சொன்னார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மதிவதனா, மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. விஸ்வநாதன், உட்பட விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அன்னை பூபதி நினைவாக ''தமிழீழ சுடர்'' என்னும் நூலும் அங்கு வெளியிடப்பட்டது. இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [த-5]

# இலங்கையில் 50 ஆயிரம்பேர் ஹெரோயினுக்கு அடிமை!

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஹெரோயின் போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப் பட்டிருப்பதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணிகம் சமீபத்தில் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்னை, திருவனந்தபுரம், பாகிஸ்தான் ஆகிய இடங்களில் இருந்து சுமார் 12 ஆயிரம் கிராம் ஹெரோ[illegible] 89 ஆம் ஆண்டுக்கும் 91 ஆம் ஆண்டுக்கும் இடையே பிடிபட்டிருப்பதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் தெரிவித்துள்ளது

போதைப் பொருள் கடத்தலுக்கு கொழும்பை ஓர் இடை நிலையமாகப் பயன்படுத்தும் பல வெளிநாட்டவர்களும் இக் காலப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் 3 நைஜீரியர்கள் நீர் கொழும்பில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 3, 6 கிலோ ஹெரோயி[illegible] கைப்பற்றப்பட்டது [த]

### கொல்களங்கள் நிறுவ கோரிக்கை

குருநகர், ஏப். 21

''ஆடு மாடுகளை வெட்டுவதற்குத் தனியான கொல்களங்கள் இல்லாததினால் அவற்றை உடன் அமைத்துத் தர வேண்டும்''.

யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. [த-51]

### கால்நடை வைத்தியப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப் 21

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கால்நடை வைத்தியப் பயிற்சி வகுப்பில், இணைந்துள்ள பயிற்சியாளர்களுக்கான முதற்கட்டப் பயிற்சிகள் முடிவடைந்துள்ளதாகவும், தொடர்ந்தும் பயிற்சியாளர்கள் செய்முறைப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. [த]

### ரயிலில் ஏற முயன்றவர் மரணம்

வவுனியா, ஏப். 21

கொழும்பு செல்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் ரயிலில் ஏற முயன்ற இளைஞர் ஒருவர் ரயிலில் இருந்து தவறிவிழுந்து நசிந்து மரணமானார்.

இப்படி கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளருக்கு சட்டசபை பிடிவிறாந்து!

சென்னை, ஏப். 21

சட்டசபையின் உத்தரவுக்கு இணங்க சட்டசபையில் ஆஜராகத் தவறிய ''இல்லஸ்டிரேட் வீக்லி'' ஆங்கில வார இதழின் முன்னாள் பத்திரிகையாளர் கே. பி. சுனிலைக் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிப்பது என்று தமிழக சட்டசபை நேற்று தீர்மானித்தது.

சட்டசபையின் சிறப்புரிமைகளை மீறும் வகையில் 'இல்லஸ்டிரேட் வீக்லி'யில் கட்டுரைகளை வெளியிட்டதற்காக இவ்வார இதழின் ஆசிரியரையும் கட்டுரையாளர் கே. பி. சுனிலையும் கூண்டில் ஏற்றித் தண்டிப்பது என்று சட்டசபை முன்னர் தீர்மானித்திருந்தது.

அதன்படி, பத்திரிகை ஆசிரியர் அனில் சர்க்காரும் கட்டுரையாளர் கே. பி. சுனிலும் நேற்று சபை முன்னிலையில் ஆஜராக வேண்டியிருந்தது.

ஆனால் அவர்கள் இருவரும் எதிர்பார்க்கப்பட்டபடி சபைக்கு சமூகமளிக்கவில்லை. அவர்களின் வருகையை எதிர்பார்த்து சபையில் கூண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

ஆசிரியர் அனில் சர்க்காரும் கட்டுரையாளர் சுனிலும் சபாநாயகருக்கு எழுதிய கடிதங்களை சபாநாயகர் சபையில் வாசித்தார். சம்பந்தப்பட்ட கட்டுரை வெளியானபோது 'இல்லஸ்டிரேட் வீக்லி'யின் ஆசிரியராகத் தாம் இருக்கவில்லை என்று அனில் சர்க்கார் தமது கடிதத்தில் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தை ஏற்று அவரைத் தண்டிப்பது இல்லை என்று சபை தீர்மானித்தது.

இதேவேளை—

திரு. சுனில் எழுதிய கடிதத்தை நிராகரிப்பது என்றும் பிடிவிறாந்து மூலம் அவரைக் கைது செய்து கொண்டுவந்து கூண்டில் ஏற்றித் தண்டிப்பது என்றும் சபை தீர்மானித்தது.

திரு. சுனில் சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் தம்மால் ஒரு மாத காலத்துக்கு சபைக்கு சமூகமளிக்க முடியாதுள்ளது என்றும் தமது கடிதத்தையே தமது விளக்கமாகக் கொள்ளும்படியும் கேட்டிருந்தார்.

திரு. சுனிலின் கடிதம் உள்நோக்கம் கொண்டதாக உள்ளது என்று கூறிய சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா, அவரைக் கைது செய்ய பிடிவாரண்ட் உத்தரவைப் பிறப்பித்தார். [உ-எ]

## முப்படை ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையினரிடம் உள்ள வளங்கள் பற்றி இருப்பு எடுப்பது, மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களை அடையாளம் காண்பது ஆகியனவே இச் சந்திப்பின் நோக்கமாகும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

திருப்புகள் மீதான கட்டுப்பாடு, மற்றும் சுயேச்சையான முறையில் திட்டமிட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஆகியன முப்படை தளபதிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர் நடத்தப்படவுள்ள உயர் நிலைப் பேச்சுகளின் ஒரு கட்டமாக வெள்ளிக்கிழமை மாநாடு இடம் பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது

இதில் கூட்டுச் செயற்பாட்டுக் கட்டளைப் பீடத்திற்கு (JOC) ஆலோசனை கூறும் பங்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச மற்றும் வெளிக்களத் தளபதிகள் மட்டத்திலான மாற்றங்களை விரைவில் எதிர்பார்க்க முடியும் என்றும்—

அனுராதபுரத்தில் அமைக்கப்படும் புதிய முன்னரங்க (Forward) தலைமைக் காரியாலயத்திற்கு அதிகாரிகள் அனுப்பப்படுவார்கள் என்றும் இராணுவ வட்டாரங்கள் கூறின. ]இ-எ]

## பௌத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிராமம ஆனந்த தேரர், வண. ரத்கம திலகசிறி தேரர், வண. ரத்கம சுதேவ தேரர் ஆகியோருடன் மற்றும் மூன்று பௌத்த குருமார்களும் தூதுக்குழுவில் அங்கம் வகிப்பர்.

விமானம் மூலம் பலாலி வந்து சேரும் தூதுக்குழுவினரை காங்கேசனிலிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் வாகன அணி மூலம் யாழ். நகருக்கு அழைத்து வருவர்.

பௌத்த குருமாரின் தங்குமிட வசதி, போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளும், விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் நேற்றுக் கலந்தாலோசனை நடத்தினர். [அ-3]

## பருத்தித்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது என்பது தெரியவரவில்லை.

கடற்படையினர் கடலில் நடத்திய அட்டகாசத்தில் வியாபாரிமூலையைச் சேர்ந்த உமாபதி சிவராசா என்ற எட்டுப் பிள்ளைகளின் தந்தையே மரணமானார்.

இவருடன் கூட கடலுக்குச் சென்ற அன்னலிங்கம் என்பவர் கடலில் நீந்திக் கரை சேர்ந்தார்.

உயிரிழந்த உமாபதி சிவராசாவின் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. மீட்கப்பட்ட அவரது படகிலும் சூட்டுச் சேதங்கள் காணப்பட்டன.

கடலில் காணாமற்போன மீனவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை. [உ-144.

## அதிபர்கள் கூட்டம்

பாடசாலை மாணவர் உணவு முத்திரை மற்றும் இரண்டாம் தவணை ஆரம்பித்தல் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்காக கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்களுக்கான கூட்டங்கள் கோட்டமட்டத்தில் நடைபெறவிருக்கின்றன.

தென்மராட்சி கோட்டத்துக்குரிய கூட்டம் நாளை காலை 9-30 மணிக்கு டிறிபேர்க் கல்லூரியிலும்—

மருதனாமடம் கோட்டக்துக்குரிய கூட்டம் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும்—

பண்டத்தரிப்பு கோட்டத்துக்கான கூட்டம் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

## போராட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேம்படுத்துதல், உழைக்கும் மக்களை அரசியல் மயப்படுத்துதல் —

மாவீரருக்கு உழைக்கும் மக்கள் அஞ்சலி செலுத்துதல், போராளிகள், துணைப் படை வீரர், தொண்டர் படையினர் ஆகியோர் மத்தியில் இருந்து உருவாகுதல் —

தேசிய வளங்களைப் பாதுகாத்தல், சுற்றாடல் சுகாதார நடவடிக்கைகள், கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் — ஆகியனவற்றை சித்திரிப்பனவாகவும் ஊர்திகள் அமைய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஊர்திகளுக்கு முன்னே செல்லும் கலை நிகழ்வுகளும் முன் சொன்ன விடயங்களைப் பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும் எனவும் முடிவாகியது. [அ]

## நாட்டைவிட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமான நிலையத்திற்கு கடந்த புதன்கிழமை சென்றார் என்பதும்—

காபூல் நிலையத்தைச் சுற்றி வளைத்திருந்த—நஜிபுல்லாவுக்கு எதிரான படையினர்—அவர் தப்பிச் செல்வதைத் தடுத்து விட்டனர் என்பதும் தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து டாக்டர் நஜிபுல்லா ஐ. நா. தூதரகத்தில் தஞ்சமடைந்தார். [ட-எ]

## படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ உயர் மட்டத் தலைவர்களும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

---

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் இலங்கை

விஞ்ஞானபீட முதலாவது

## அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும், பின்வரும் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

முதலாவது அரையாண்டு முதலாம் வருட பரீட்சை ஆரம்பம்: **27 - 04 - 1992**

முதலாவது அரையாண்டு இரண்டாம் வருட பரீட்சை ஆரம்பம்: **06—05—1992**

முதலாவது அரையாண்டு மூன்றாம் வருட பரீட்சை ஆரம்பம்: **11—05—1992**

(அ/1937) — பதிவாளர்

---

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி

(களஞ்சியப் பொறுப்பாளர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி நேற்று [20-04-92] காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், அனுராஜ்ஜின் அருமைத் தந்தையும், சக்திவேல், கிருஸ்ணமூர்த்தி, அனுசியாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆர்தன்ஸ், கார்த்திகேசர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [21-04-92] மாலை 1.00 மணியளவில் கந்தரோடையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

''பங்களபவன்''
சந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
ப. பிரதீபன்
[20653]

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னசாமிசர்மா இந்திராக்ஷி அம்மா

கட்டுடை சின்னசாமிசர்மா இந்திராக்ஷி அம்மா 19-4-92 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார். அன்னார் காலஞ்சென்ற சோமாஸ்கந்தசர்மா, பாலசண்முகக் குருக்கள் [சிறீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு], பத்மநாபசர்மா [முகுந்தன்], திருமதிகள் காயத்திரிதேவி லட்சுமிகாந்தம் ஐயர், சுகந்தி குந்தளாம்பிகை பிரணதார்த்திஹரக் குருக்கள், கல்யாணி ரஞ்சிதானந்தசர்மா, மற்றும் ஹேமமாலினி, கிருஷ்ணகுமாரசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [20-4-92] நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கட்டுடை, சி. பாலசண்முகக் குருக்கள்
மானிப்பாய். [20651] [மகன்]

### சரவணமுத்து தாமோதரம்

மஞ்சந்தோட்டம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து தாமோதரம் [இளைப்பாறிய அதிபர்] கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்வசுந்தரம் [சுவீடன்], இராஜகுலேந்திரன் [பிரான்ஸ்], ஜெயரத்தினம் [சுவீடன்], இராஜயோகம் [ஆசிரியை, கிளிநொச்சி], மாலதி [ஆசிரியை, பெரியதம்பனை] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் [புகையிரத நிலைய அதிபர், கிளிநொச்சி], மாதவர் [ஆசிரியர், பெரியதம்பனை], கிருஷ்ணமாலா, செல்வராணி ஆகியோரின் மாமனாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மஞ்சந்தோட்டம், கி. பாலேந்திரன்
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி
(20657)

### திருமதி கண்மணி வேலுப்பிள்ளை

[நாரந்தனை]

நாரந்தனையூர் திருமதி கண்மணி வேலுப்பிள்ளை 20-4-1992 அன்று காலமானார்.

இவர் காலம்சென்ற வேலுப்பிள்ளையின் [முன்னை நாள் கிராம சபை அங்கத்தவர்] அன்பு மனைவியும், சொர்ணம்மா, காலம்சென்ற அரசரெத்தினம் [ஊர்காவற்றுறை பட்டின சபை முன்னைநாள் ஓவசியர்], றஞ்சிதம்மா, கோபாலபிள்ளை, பூமணி, கனகராஜா, நாகராஜா [துறைமுக அதிகார சபை, கொழும்பு], யோகராஜா, பரமேஸ்வரன் [ஜவ்வார்ஜி பிறதர்ஸ், கொழும்பு], நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. மு. பாலசிங்கம், திருமதி அ. நாகரெத்தினம், திரு. இ நா. கந்தையா, காலம்சென்ற சி. பாலசிங்கம் [ஒப்பந்தகாரர், அரச மரக் கூட்டுத்தாபனம்], திருமதி கோ. மகேஸ்வரி, திருமதி க. விசாலாட்சி, திருமதி நா. பஞ்சரெத்தினம், திருமதி யோ. புவனேஸ்வரி, திருமதி ப. விவேகவதி, திரு. சி. தங்கேஸ்வரன் [இளைப்பாறிய களஞ்சிய அத்தியட்சகர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் அன்பு மாமியும், காலம்சென்ற வே. கந்தையா, காலம்சென்ற வே. இராமநாதர், காலம்சென்ற நா. செல்லமுத்து, காலம்சென்ற ஆ. முத்துக்குட்டி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கீழ் வரும் விலாசத்தில் உள்ள மகள் திருமதி பா. பூமணி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இன்று 21 - 4 - 92 செவ்வாய்க்கிழமை பி. ப. 3 - 00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயது செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
20, பிரப்பங்குளம் வீதி, வே. யோகராஜா
யாழ்ப்பாணம். (20658) [மகன்]

### V. C. செல்லக்கண்டு சின்னத்துரை

கொட்டைக்காடு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட V. C செல்லக்கண்டு சின்னத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் குமார்ரெக்ஸ் முத்திரைச்சந்தி நல்லூர், யோகாஸ் புடவை அகம் பெரியகடை ஆகியவற்றின் உரிமையாளரின் மாமனாரும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், ரஞ்சிதமலர், யோகேஸ்வரி, அற்புதலிங்கம், ஆனந்தலிங்கம், இரத்தினமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மகுமாரன், இந்திரராசாவின் மாமனாரும், விஜிதரன், விஸ்ணுவர்த்தன், வேணுகரன், ரமேஸ்குமார், தினேஸ்குமார், ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை [21-04-92] பிற்பகல் 2. 30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
யோகாஸ் பிடவை அகம் பத்மகுமார்
உரிமையாளர் [மருமகன்]
யாழ்ப்பாணம். (20659)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org